www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V12His

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

வகுப்பு 12

நேரம்: 3.00 மணி | வரலாறு | மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20×1=20

1) "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" என அழைக்கப்படுபவர்
அ) பாலகங்காதர திலகர் ஆ) M.K. காந்தி
இ) தாதாபாய் நௌரோஜி ஈ) சுபாஷ் சந்திரபோஸ்

2) மாறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.
அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) சார்லஸ் வில்கின்ஸ்
இ) மாக்ஸ் முல்லர் ஈ) அரவிந்த கோஷ்

3) பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்தமடம்
ஆ) G. சுப்பிரமணியம் - விடிவெள்ளிக்கழகம்
இ) மிண்டோபிரபு - பல்கலைக்கழகச் சட்டம், 1904
ஈ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

4) கதார் கட்சி யாரால் நிறுவப்பட்டது?
அ) லாலா லஜபதிராய் ஆ) ஏ.சி. மஜும்தார்
இ) லாலா ஹர்தயாள் ஈ) சங்கர் லால் பாங்கர்

5) தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகள் தனது வெற்றிகரமான முதலாவது சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கிய இடம்
அ) கேதா ஆ) தண்டி இ) சம்பரான் ஈ) பர்தோலி

6) காந்தியடிகளின் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு
அ) ஏப்ரல் 6, 1930 ஆ) மார்ச் 6, 1930 இ) ஏப்ரல் 4, 1939 ஈ) மார்ச் 4, 1930

7) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
அ) 1920 ஆ) 1925 இ) 1930 ஈ) 1935

8) பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்?
அ) எம்.என். ராய் ஆ) பகத்சிங்
இ) எஸ்.ஏ. டாங்கே ஈ) ராம் பிரசாத் பிஸ்மில்

9) முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்

10) இரு நாடு கொள்கையை முதன் முதலில் கொண்டு வந்தவர் ..............
அ) இராஜாஜி ஆ) ராம்சே மெக்டொனால்டு
இ) முகமது இக்பால் ஈ) சர் வாசிர்ஹசன்

11) **கூற்று** : பிரிட்டிஷ் அரசாங்கம் வகுப்புவாதத்தை வளர்க்கவும் பரப்பவும் பின்பற்றியது தனித்தொகுதிக் கொள்கையாகும்.
**காரணம்** : மக்கள் இரண்டு தனித்தொகுதிகளாக பிரிக்கப்பட்டதால் வகுப்புவாத அடிப்படையிலேயே வாக்களித்தனர்.
அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
ஆ) கூற்று சரி, காரணம் தவறு. இ) கூற்று மற்றும் காரணம் தவறு.
ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

12) இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் பெயர் ............ ஆகும்.
அ) சுபாஷ் படைப்பிரிவு ஆ) கஸ்தூர்பா படைப்பிரிவு
இ) கேப்டன் லட்சுமி படைப்பிரிவு ஈ) ஜான்சிராணி படைப்பிரிவு

13) பிரிட்டிஷார் எந்தக் காலத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்தனர்?
அ) ஆகஸ்ட் 15, 1947 ஆ) ஜனவரி 26, 1950
இ) ஜூன் 1948 ஈ) டிசம்பர் 1949

14) ஆந்திர மாநில கோரிக்கையினை முதன்முதலில் எழுப்பியவர் ...........
அ) பொட்டி ஸ்ரீராமுலு ஆ) பட்டாபி சீத்தாராமையா
இ) கே.எம்.பணிக்கர் ஈ) டி.பிரகாசம்

15) மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MGNREGA) எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பை ஒரு தனிநபருக்கு வழங்குகிறது?
அ) 200 ஆ) 150 இ) 100 ஈ) 75

16) காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) W.C. பானர்ஜி ஈ) M.G. ரானடே

17) கீழ்கண்டவற்றுள் எது லியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை?
அ) வர்ஜின் ஆஃப் தி ராக்ஸ் ஆ) இறுதி விருந்து
இ) மோனலிசா ஈ) மடோனாவும் குழந்தையும்

18) வட அமெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள் ...........
அ) போர்த்துக்கீசியர் ஆ) ஸ்பானியர் இ) டேனியர் ஈ) ஆங்கிலேயர்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

19) பன்னாட்டு சங்கம் ........... ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது.
அ) 1939 ஆ) 1941 இ) 1945 ஈ) 1946

20) பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்கு திட்டம் வகுத்தவர் ........... ஆவார்.
அ) யாமமோட்டோ ஆ) ஸ்கூஸ்னிக்
இ) இரண்டாம் கெய்சர் வில்லியம் ஈ) ஹிரோஹிடோ

## பகுதி - II

7×2=14

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

21) இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.
22) புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை எழுதுக.
23) பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.
24) கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?
25) தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் ஏன் எதிர்க்கப்பட்டது?
26) இரண்டாவது லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு யாது?
27) பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.
28) பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.
29) "மூவர் தலையீடு" எனப்படுவது யாது?
30) பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

## பகுதி - III

**பின்வரும் வினாக்களில் எவையேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமான விடையளிக்கவும்.**
**வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7×3=21

31) பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக்கூலி தொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?
32) அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.
33) பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
34) டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.
35) 1921 இல் நடைபெற்ற மலபார் கலகத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து என்ன?
36) காஷ்மீர் அரசர் எவ்வாறு இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டார்?
37) பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.
38) 1492 இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.
39) ஐ.நா. சபையின் சாசனம் முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பல்வேறு கட்டங்கள் குறித்து எழுதுக.
40) அகழிப்போர் எவ்வாறு நடத்தப்பட்டது?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 7×5=35

41) அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.
(அல்லது)
ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

42) அ) திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.
(அல்லது)
ஆ) டாக்டர். அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக.

43) அ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்குமேடைக்கு இட்டுச் சென்றது?
(அல்லது)
ஆ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க.

44) அ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.
(அல்லது)
ஆ) சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.

45) அ) இத்தாலிய மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும்.
(அல்லது)
ஆ) முதல் உலகப் போருக்கான காரணங்களையும் விளைவுகளையும் கணக்கிடுக.

46) அ) சீனாவில் பொதுவுடைமை அரசு உருவாக மா-சே-துங்கின் பங்களிப்பை விவரித்து எழுதுக.
(அல்லது)
ஆ) **இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகள் நடைபெற்ற பின்வரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:**
1. பம்பாய் 2. சென்னை 3. சூரத் 4. லாகூர் 5. கல்கத்தா

47) அ) அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும்.
(அல்லது)
ஆ) கி.பி. 1900 முதல் கி.பி. 1930 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்ச்சிகளை காலக்கோடு வரைந்து காட்டுக.

----------